22nd December 1956]

Rural banks

* 407 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have received a copy of the resolution passed at the Tiruchirappalli District Vivasayigal Sangam Conference in the month of May 1956 requesting the Government to open rural banks in every firka; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI V. BALAKRISHNAN : கிராமப்புறங்களில் பாங்குகள் ஏற்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆர்வம் இருந்தும் அங்கே இருக்கக்கூடிய மக்களுடைய உதவி இல்லாததால் அந்த விருப்பம் நிறைவேறவில்லை என்பது கனம் மந்திரிக்குத் தெரியுமா ? அப்படி இருந்தால் மக்களுக்கு ஆர்வம் இல்லை என்பதை தெரிந்துகொள்ள ஆராய்ச்சி செய்ய முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படிப்பட்ட தகவல் ஒன்றும் என்னிடம் இல்லை. திருச்சி ஜில்லாவில் இப்பொழுது இரண்டு கூட்டுறவு பாங்குகள் இருக்கின்றன. அவைகள் நங்கவரம், துறையூர் முதலிய இடங்களில் இருக்கின்றன. மேற்கொண்டு வரும் ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் 300 கிராம விவசாய பாங்குகள் அமைப்பது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. 1956-57-ல் திருச்சி ஜில்லாவில் ஏழு விவசாய கிராம பாங்குகள் அமைப்பது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. சீக்கிரத்தில் அதை நிறைவேற்றப்படும். அவைகள் பஞ்சனதேவி, கோவிந்தபுரம், பெரம்பலூர், எல். என். சமுத்திரம், குணமங்கலம், சூரக்காடு, ஆலங்குடி முதலிய இடங்களில் அந்த பாங்குகளை அமைக்கப்படும்.

SRI N. K. PALANISAMY : மாகாணத்தில் இருக்கக்கூடிய எல்லா பிர்க்காக்களிலும் கூட்டுறவு ஸ்டோர்கள், மார்க்கெட்டிங் சொஸைட்டிகள் இருக்கின்றன. அவைகளில் ஏராளமான மூலதனம் இருக்கின்றன. அவைகளை வைத்துக்கொண்டு இம்மாதிரியான பாங்குகளை ஏன் அமைக்கக் கூடாது என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கூட்டுறவு பாங்குகளை எப்படி பாங்குகளாக மாற்றுவது என்பது புரியவில்லை. கனம் அங்கத்தினர் அதற்கு திட்டம் தயாரித்துக் கொடுத்தால் அதை பரிசீலனை செய்யலாம்.

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ANNOUNCEMENT BY THE DEPUTY SPEAKER *RE*

(1) GUILLOTINE OF DEMANDS.

DEPUTY SPEAKER : I have to announce to the House that the guillotine will be applied at 1-30 p.m. to-day to such of those Demands for Advance Grants which might not have been considered by the House till then.